தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

சனிக்கிழமை, 1979 மார்ச் 10.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

(1) தகவல் கோரல்.

(அ) எதிர்க் கட்சித் தலைவர்கள் யாரும் அவையில் இல்லாதது குறித்து.

திரு. துரை கோவிந்தராசன் : தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் இன்பர்மேஷன். எதிர்க்கட்சித் தலைவர்கள் வரிசையில் யாருமே இல்லையே.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லாவிட்டால் பரவாயில்லை. அமைச்சர்கள் வரிசையில் தான் இல்லாமல் இருக்கக் கூடாது.

(2) வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

தஞ்சை மாவட்டத்திலுள்ள நலப்பள்ளிகளில் உள்ள பகுதி நேர ஊழியர்களது ஊதியம்.

குறுகிய கால வினா எண். 10—திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்ட அரிசன நலத்துறையின் பள்ளிகளில் பணியாற்றும் பகுதி நேர ஊழியர்களுக்கு ஊதியக்குழு அறிக்கைப் படி ஊதியம் வழங்கப்படுகிறதா ?

(ஆ) இல்லையெனில் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : (அ) தஞ்சை மாவட்ட அரிசன நலப்பள்ளிகளில் பணியாற்றும் பகுதி நேர ஊழியர்களுக்கு மூன்றாவது ஊதியக்குழுவின் அறிக்கையின்படி ஊதியம் வழங்கப்படவில்லை.

(ஆ) பகுதி நேர ஆசிரியர்கள் முன்னர் வாங்கி வந்த ஊதியத்தைவிட தற்போது மூன்றாவது ஊதியக்குழுவின் பரிந்துரையின்மேல் நிர்ணயிக்கப்பட்ட ஊதியம் குறைவாக உள்ளதால் புதிய ஊதியப்படி ஊதியம் வழங்கப்படவில்லை.